சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

தெஹியோவிற்ற வலயம்

இடர் முகாமைத்துவ கால செயலட்டை

பாட இணைச் செயற்பாடு – 09

தரம் - 03

C. ரூபி ஜெசிந்தா (ஆசிரிய ஆலோசகர்)

## ▪ வண்டு ஒன்றினை உருவாக்குவோம்.

❖ **<u>தேவையானவை</u>**

- சிவப்பு , கறுப்பு, வெள்ளை நிற A4 தாள்கள்
- கத்தரிக்கோல்
- பாவித்த யோகட்கோப்பை ஒன்று
- கம் போத்தல்

❖ **<u>பெற்றோரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்</u>**

- யோகட் கோப்பையின் முன்பக்கத்தை கறுப்பு நிற A4 தாளில் வைத்து வட்டமொன்றினை கீறி கத்தரிக்கோலால் வெட்டிக் கொள்க.
- யோகட் கோப்பையின் கீழ்ப்பக்கத்தை கறுப்பு நிற A4 தாளில் வைத்து வட்டமொன்றினை கீறி கத்தரிக்கோலால் வெட்டிக் கொள்க.
- வட்டம் இரண்டினையும் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒட்டுக.
- வெள்ளை நிற A4 தாளில் சிறிய வட்டம் இரண்டினை வெட்டி கண்களை ஒட்டுக.
- கறுப்பு நிற A4 தாளில் இரண்டு கீலங்களாக வெட்டி படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வெட்டி ஒட்டுக
- சிவப்பு நிற வட்டங்கள் இரண்டினை வெட்டி எடுத்து படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு நடுவில் சமமாக மடித்து ஒட்டுக.
- கறுப்பு நிற சிறு சிறு வட்டங்களை வெட்டி சிவப்பு நிற வட்டங்களில் சில சில இடங்களில் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒட்டுக.
- வண்டின் பின்பக்கத்தில் வட்டங்கள் இரண்டினை ஒட்டி நடுவிரலின் ஊடாக பிடித்துக்கொண்டு வண்டோடு உரையாடுக.





